# பரீட்சகரின் அறிக்கை

## AA2 பரீட்சை – 2018 யூலை

## (AA21) உயர் நிதிக் கணக்கீடு

---

## பகுதி A

நோக்கச் சோதனை வினாக்கள் (OTQs)

(மொத்தம் 20 புள்ளிகள்)

### வினா 01

இவ்வினாவில் 20 புள்ளிகளுக்கான 8 கட்டாய வினாக்கள் உள்ளடங்கியுள்ளன. உயர் நிதிக் கணக்கீட்டுப் பாடத்தை உள்ளடக்கும் வகையிலான அறிவு இங்கு பரீட்சிக்கப்பட்டிருந்தது.

**(1.1)** சகல பரீட்சார்த்திகளும் மொத்த எல்லையினை அடையாளங் கண்டிருந்தனர். பெரும்பாலானவர்கள் சரியாக விடையளித்திருந்தனர்.

**(1.2)** பெரும்பாலான பரீட்சார்த்திகள் பரிப்பு வரையறுக்கப்பட்ட கம்பனிகள் தொடர்பான இவ்வினாவுக்கு வெற்றிகரமாக விடையளித்திருந்தனர்.

**(1.3)** பெரும்பாலான பரீட்சார்த்திகள் இலாப நோக்கற்ற நிறுவனங்கள் தொடர்பான இவ்வினாவுக்கு சரியாக விடையளித்திருந்தனர்.

**(1.4)** சொத்து விற்பனை வருமானம் அல்லது இழப்பினை சரியாகக் கணிப்பீடு செய்வதற்கு பரீட்சார்த்திகளால் இயலுமாக இருந்திருந்த போதிலும் அவர்களால் அது இலாபமா அல்லது நட்டமா என்பதை அடையாளங் காண முடியவில்லை.

**(1.5)** பெரும்பாலான பரீட்சார்த்திகள் பங்காளர்களின் ஆதாயம் பெறும் விகிதத்தை கணிப்பிட்டதன் மூலம் வெற்றிகரமாக விடையளித்திருந்தனர். எவ்வாறாயினும், மோசமான விடைகளை அளித்திருந்த பரீட்சார்த்திகளும் காணப்பட்டனர். சில பரீட்சார்த்திகள் பின்னங்களை தீர்த்திருக்கவில்லை.

**(1.6)** பங்குடமையொன்றிற்கும் தனியார் கம்பனி ஒன்றிற்குமிடையிலான வேறுபாட்டைச் சரியாகக் குறிப்பிட்டதன் மூலம் புள்ளிகளைப் பெற்றிருந்த பரீட்சார்த்திகள் காணப்பட்டனர். சில பரீட்சார்த்திகள் வரையறுக்கப்பட்ட பொதுக் கம்பனியுடன் ஒப்பிட்டிருந்ததால் அவர்களால் புள்ளிகளைப் பெற இயலவில்லை.

**(1.7)** பெரும்பாலான பரீட்சார்த்திகள் முதல் உள்ளே முதல் வெளியே முறையைப் பிரயோகித்ததன் மூலம் மாதத்தின் இறுதி இருப்பைப் பெற்றதால் சரியான விடையை அளித்திருந்தனர். எவ்வாறாயினும், சில பரீட்சார்த்திகள் பிழையான விடைகளை வழங்கியிருந்தனர்.

**(1.8)** இந் வினாவின் மூலம் LKAS 10 இன் பிரயோகம் மீதான அறிவு பரீட்சிக்கப்பட்டிருந்தது. குறைந்தளவிலான பரீட்சார்த்திகளே சரியாக விடையளித்திருந்தனர். வினாவைச் சரியாக விளங்கிக்கொள்ளாமை, நியமங்கள் தொடர்பான அறிவு மிகக் குறைந்த மட்டத்தில் காணப்பட்டமை என்பவற்றைக் காணக்கூடியதாக இருந்தது.

இவ்வினாவுக்கு சகல பரீட்சார்த்திகளும் சரியான விடை அளித்திருந்த போதிலும், ஒரு சில பரீட்சார்த்திகளுக்கு மாத்திரமே முழுப் புள்ளிகளையும் பெறக்கூடியதாக இருந்தது. அதிகளவான பரீட்சார்த்திகள் வினாவைச் சரியாக வாசித்து, விளங்கிக்கொள்ளாமையால் விடையளிக்கத் தவறியிருந்தனர். பங்குடமைக் கட்டளைச் சட்டம் 1890 இன் 24 ஆம் பந்திக்கும் 2007 ஆம் ஆண்டின் 07 ஆம் இலக்க கம்பனிகள் சட்டத்திற்குமிடையேயுள்ள வேறுபாடுகள் மீதான கோட்பாட்டு ரீதியான அறிவு மிகவும் கீழ் மட்டத்தில் காணப்பட்டதை அவதானிக்கக்கூடியதாக இருந்தது.

# பகுதி B

ஐந்து (05) கட்டாய வினாக்கள்

(மொத்தம் 25 புள்ளிகள்)

## வினா 02

இவ்வினா வங்கிக் கணக்கிணக்கக் கூற்றின் தயாரிப்புடன் தொடர்புடையதாகும். இங்கு செம்மையாக்கப்பட்ட காசுக் கட்டுப்பாட்டுக் கணக்கு மற்றும் வங்கிக் கணக்கிணக்கக் கூற்று ஆகியவற்றைத் தயாரிக்குமாறு கோரப்பட்டிருந்தது. பெரும்பாலான பரீட்சார்த்திகள் வெற்றிகரமாக விடையளித்திருந்ததால் அவர்களால் முழுப் புள்ளிகளையும் பெற முடிந்திருந்தது. சில பரீட்சார்த்திகள் செம்மையாக்கப்பட்ட காசேட்டுடன் தொடர்புடைய பதிவுகளை தனித்தனியாக அடையாளம் கண்டிராததால் அவர்களால் புள்ளிகளைப் பெற இயலவில்லை. மறு புறத்தில், சில பரீட்சார்த்திகள் காசேடு மற்றும் வங்கிக் கணக்கிணக்கக் கூற்று ஆகியவற்றில் குறிப்பிடப்பட வேண்டிய ஏதோ சில உருப்படிகளைக் குறிப்பிட்டிருந்தனர். சில பரீட்சார்த்திகள் அடிப்படை கோட்பாட்டு ரீதியான அறிவைச் சரியாக விளங்கிக்கொள்ளவில்லை.

## வினா 03

இங்கு வியாபார வருமதிகள் கட்டுப்பாட்டுக் கணக்கு மற்றும் வியாபார சென்மதிகள் கட்டுப்பாட்டுக் கணக்கு ஆகியவற்றைத் தயாரிப்பதற்குத் தேவைப்படுத்தப்பட்டது. இது அதிகளவான பரீட்சார்த்தி களால் முழுப் புள்ளிகளும் பெறப்பட்ட ஓர் வினாவாகும். சில பரீட்சார்த்திகள் பதிவுகளைச் சரியானவாறு அடையாளங் கண்டிராததால் அவர்களால் முழுப் புள்ளிகளையும் பெற முடியவில்லை. சில பரீட்சார்த்திகள் உரிய கணக்கின் ஆரம்ப மீதியினைக் குறிப்பிட்டிருக்கவில்லை. சிலர் வரவு மற்றும் செலவுப் பதிவுகளை இடமாற்றி எழுதியிருந்தனர். சில பரீட்சார்த்திகள் வியாபார வருமதிகள் கட்டுப்பாட்டுக் கணக்கிலுள்ள வியாபாரக் கடன்கொடுத்தோருக்கு செலுத்தப்பட்ட மறுக்கப்பட்ட காசோலையை செம்மையாக்கம் செய்திருந்தனர். எவ்வாறாயினும், பெரும்பாலான பரீட்சார்த்திகள் இவ்வினாவுக்கு முழுப் புள்ளிகளையும் பெற்றிருந்தனர்.

## வினா 04

இங்கு கூலிகள் கட்டுப்பாட்டுக் கணக்கு மற்றும் ஊழியர் சேமலாபநிதிக் (EPF) கொடுப்பனவுக் கணக்கு ஆகியவற்றைத் தயாரிப்பதற்கு எதிர்பார்க்கப்பட்டது. பெரும்பாலான பரீட்சார்த்திகள் தமது நடைமுறை அறிவைக் கொண்டு சரியான விடையை அளித்திருந்ததன் மூலம் இதற்கான முழுப் புள்ளிகளையும் அவர்களால் பெறக்கூடியதாக இருந்தது. சில பரீட்சார்த்திகள் இவ்வினாவுக்கு விடையளிக்கவில்லை. சில பரீட்சார்த்திகள் வரவு மற்றம் செலவுப் பதிவுகளை இடமாற்றிப் பதிந்திருந்ததால் புள்ளிகளை இழந்திருந்தனர். EPF இற்கான 12% தொழில்தருநரின் பங்களிப்பை கூலிகள் கட்டுப்பாட்டுக் கணக்கில் குறிப்பிட்டிருந்த பரீட்சார்த்திகளும் காணப்பட்டனர். சில பரீட்சார்த்திகள் கணக்குகளைத் தயாரிப்பதற்குப் பதிலாக நாட்குறிப்பேட்டுப் பதிவுகளைத் தயாரித்திருந்தனர்.

## வினா 05

இங்கு **அமல், நிமல், கமல்** பங்குடமையின் 2018 மார்ச் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான இலாப அல்லது நட்டப் பகிர்வுக் கணக்கினைத் தயாரிக்குமாறு கேட்கப்பட்டது. இதற்கு பரீட்சார்த்திகளால் வெற்றிகரமாக விடையளிக்க முடிந்திருந்தது. சில பரீட்சார்த்திகள் பங்காளர்களின் கூலிகள் மற்றும் மூலதனம் மீதான வட்டி ஆகியவற்றைச் சரியாக எடுத்திராததால் பிழையான விடைகளை வழங்கியிருந்தனர். மூலதனம் மீதான வட்டியைக் கணிப்பிடுவதற்கு மூலதனக் கணக்கின் சரியான மீதியை அடையாளங் காணத் தவறியிருந்த பரீட்சார்த்திகளும் காணப்பட்டனர். பெரும்பாலானவர்கள் வெற்றிகரமாக விடையளித்ததன் மூலம் போதுமானளவு புள்ளிகளைப் பெற்றிருந்தனர்.

## வினா 06

இங்கு நன்மதிப்புடன் தொடர்புடைய செம்மையாக்கங்களைப் பதிவு செய்வதற்கும் புதிய மூலதனத்தை உள்ளிடுவதுடன் தொடர்புடைய பதிவுகளைப் பதிவு செய்தற்குமான பிறைட் லைற் பங்குடமையின் நாட்குறிப்பேட்டுப் பதிவுகளைத் தயாரிப்பதற்கு எதிர்பார்க்கப்பட்டது. அதிகளவான பரீட்சார்த்திகளால் சரியான விடையை அளிக்க முடிந்திருந்தது. எவ்வாறாயினும், நாட்குறிப்பேட்டுப் பதிவுகளுக்குப் பதிலாக பேரேட்டுக் கணக்குகளைத் தயாரித்திருந்த பரீட்சார்த்திகளும் காணப்பட்டனர். இலாப அல்லது நட்டத்தைக் கணிப்பிடும்போது, நன்மதிப்பைச் செம்மையாக்கம் செய்யும்போதும் மூலதனப் பங்களிப்பை அடையாளங் காணும்போதும் விகிதங்களைப் பிரயோகித்ததில் வழுக்கள் காணப்பட்டமை அவதானிக்கப்பட்டது. எவ்வாறாயினும், பெரும்பாலான பரீட்சார்த்திகள் இவ்வினாவுக்கான முழுப் புள்ளிகளையும் பெற்றிருந்தனர்.

# பகுதி C

மூன்று (03) கட்டாய வினாக்கள்

(மொத்தம் 30 புள்ளிகள்)

## வினா 07

இவ்வினா அரங்கத் துறையை ஊக்குவிப்பதற்காக தாபிக்கப்பட்டிருந்த கழகம் ஒன்றின் வருமான, செலவினக் கணக்கினைத் தயாரிப்பதற்குக் கேட்டிருந்தது. அத்துடன் கழக உறுப்பினர்களின் பயன்பாட்டிற்காக இயக்கப்படுகின்ற உணவுச்சாலையின் வியாபாரக் கணக்குகளைத் தயாரிப்பதற்கு இங்கு எதிர்பார்க்கப்பட்டிருந்தது. உறுப்பினர்களின் சந்தாக் கணக்கினைத் தயாரிப்பது தொடர்பான அறிவைக் கொண்டிருந்த பரீட்சார்த்திகள் ஆண்டிற்குரிய சரியான சந்தாவைப் பெற்றிருந்ததுடன் நியாயமானளவு புள்ளிகளையும் பெற்றிருந்தனர். இங்கு சந்தாக் கணக்கின் மீதிகளையும் நிலுவையாகவுள்ள சந்தாக்களையும் ஆண்டிற்கான உறுப்பினர் சந்தாவையும் கணிப்பிடுமாறு கேட்கப்பட்டிருந்தது. எவ்வாறாயினும், அதிகளவான பரீட்சார்த்திகள் இவ்வினாவுக்குச் சரியாக விடையளித்திருக்கவில்லை. இவ்வினாவுக்கு விடையளித்த பரீட்சார்த்திகளால் பெற்றுக்கொள்ளப்பட்ட புள்ளிகளும் சராசரி மட்டத்திலேயே காணப்பட்டது. உறுப்பினர் பங்களிப்பைக் கணிப்பிடுவதற்கு இலகுவாக இருந்த போதிலும், சில பரீட்சார்த்திகள் அதனைச் சரியானவாறு சமர்ப்பிக்கத் தவறியிருந்தனர். சிலர் வரவு மற்றம் செலவு மீதிகளை இடமாற்றிக் குறிப்பிட்டிருந்தனர். செய்முறைகளைத் தெளிவாக வழங்கியதன் மூலம் பல பரீட்சார்த்திகளால் புள்ளிகளைப் பெறக்கூடியதாக இருந்தது. எவ்வாறாயினும், பெரும்பாலான பரீட்சார்த்திகளால் முழுப் புள்ளிகளையும் பெறக்கூடியதாக இருந்தது.

## வினா 08

தனியுடமை வியாபாரம் ஒன்றின் பூரணமற்ற நிதித் தகவல்களை அடிப்படையாகக் கொண்டு பரீட்சைமீதியைத் தயாரிப்பதற்கான வினா இதுவாகும். வியாபார வருமதிக் கணக்கு, வியாபாரச் சென்மதிக் கணக்கு, வங்கிக் கணக்கு மற்றும் மின்சாரச் செலவுக் கணக்கு ஆகியவற்றைத் தயாரிப்பதன் மூலம் சரியான மீதிகளைப் பெற்று, ஆரம்ப மீதிக்கான செம்மையாக்கங்களைச் செய்வதன் மூலம் பரீட்சை மீதியைத் தயாரிப்பதற்கு தேவைப்படுத்தப்பட்டது. பல பரீட்சார்த்திகள் நிகரச் சொத்துக்களின் ஆரம்ப மற்றும் இறுதி மீதிகளைச் சரியாக இனங்காணத் தவறியிருந்தனர். அதிகளவான பரீட்சார்த்திகள் வியாபார வருமதிக் கணக்கு மற்றும் வியாபார சென்மதிக் கணக்கு ஆகியவற்றைத் தயாரித்ததன் மூலம் விற்பனை மற்றும் கொள்வனவுப் பெறுமானங்களைச் சரியாகப் பெற்றுக்கொண்டிருந்தனர். சில பரீட்சார்த்திகள் பரீட்சை மீதிக்குப் பதிலாக ஐந்தொகையைத் தயாரித்திருந்தனர். சில பரீட்சார்த்திகள் வினாவுக்கு விடையளிக்க எவ்வித முயற்சியும் எடுத்திருக்கவில்லை. பரீட்சை மீதிக்கான சரியான வடிவத்தை பயன்படுத்தாத பரீட்சார்த்திகளும் காணப்பட்டனர். பரீட்சார்த்திகள் இவ்வினாவுக்கான புள்ளிகளை மிக இலகுவாகப் பெற்றிருக்க முடியும். அவர்கள் வங்கிக் கணக்கு மற்றும் விற்பனை கணக்கு ஆகியவற்றின் மீதிகளைச் சரியாகக் கணித்திருப்பின் அதிக புள்ளிகளைப் பெற்றிருக்க முடியும்.

## வினா 09

இவ்வினா பங்குடமை ஒன்றின் நடைமுறைக் கணக்குகள் மற்றும் மூலதனக் கணக்குகள் ஆகியவற்றைத் தயாரிப்பதுடன் தொடர்பான அறிவைப் பரீட்சித்திருந்தது. பரீட்சார்த்திகள் குறிப்பிட்ட அளவுக்கு இவ்வினாவுக்கு விடையளிக்கக்கூடியதாக இருந்தது. எவ்வாறாயினும், உரிய கணக்குகளை தயாரிப்பதற்கு தனித்தனியான பதிவுகளை அடையாளங் காணாத பரீட்சார்த்திகளும் காணப்பட்டனர். பங்காளர்களின் கூலிகளைக் கணிப்பிடுவதில் தவறுகள் காணப்பட்டதுடன் பங்காளர்கள் மத்தியில் இலாப அல்லது நட்டத்தைப் பகிர்வதற்கு சரியான விகிதங்களையும் பயன்படுத்தியிருக்கவில்லை. சில பரீட்சார்த்திகள் நன்மதிப்பைச் சரியாகக் கணிப்பிட்டிருந்ததுடன் மூலதனக் கணக்கிலுள்ள நன்மதிப்பை அகற்றுவதற்கான பதிவுகளை சமர்ப்பித்திருக்கவில்லை. சிலர் நடைமுறைக் கணக்குகளிலுள்ள நன்மதிப்பு மீது செம்மையாக்கங்களைச் செய்ததன் காரணமாக புள்ளிகளை இழந்திருந்தனர். சிலர் மீள்மதிப்பீட்டுத் தொகையைப் பெறுவதில் விட்டிருந்த வழுக்கள் காரணமாகவும் மூலதனக் கணக்குகளில் செம்மையாக்கங்களைச் செய்ததனாலும் புள்ளிகளை இழந்திருந்தனர். சிறு தொகையான பரீட்சார்த்திகள் பங்குடமையின் சரியான விகிதங்கள் பற்றி கருத்திற் கொள்ளாததன் காரணமாக பிழையான விடைகளை வழங்கியிருந்தனர். சில பரீட்சார்த்திகள் மூலதனக் கணக்குகளின் மீதிகளைச் சரியாக அடையாளம் கண்டிராததால் மூலதனம் மீதான வட்டியைச் சரியாகக் கணிப்பிட்டிருக்கவில்லை.

## பகுதி D

ஒரு கட்டாய வினா
(25 புள்ளிகள்)

## வினா 10

இங்கு தனியார் கம்பனி ஒன்றின் முகாமையின் பாவனைக்காக இலாப அல்லது நட்டக் கணக்கு, ஏனைய முற்றடக்க வருமானக் கூற்று மற்றும் நிதி நிலைமைக் கூற்று ஆகியவற்றைத் தயாரிப்பதற்கு எதிர்பார்க்கப்பட்டது. இங்கு கணக்கீட்டு நியமங்கள், இரட்டைப் பதிவுகள் மற்றும் கணக்கீட்டுக் கொள்கைகள் என்பவற்றின் மீதான அறிவு பரீட்சிக்கப்பட்டது. சில பரீட்சார்த்திகள் வழக்கற்றுப்போன இருப்புகள் மற்றும் தனிச்சங்கள் மீதான வட்டி ஆகியன தொடர்பான செம்மையாக்கங்களைத் தீர்த்திருக்கவில்லை. இவ்வினா கம்பனிக் கணக்குகள் தொடர்பான ஒட்டுமொத்த அறிவையும் பரீட்சித்திருந்தது. கணக்கீட்டு நியமங்கள் மீதான பரீட்சார்த்திகளின் கவனம் மற்றும் அறிவு குறைந்த மட்டத்தில் காணப்பட்டதை அவதானிக்கக்கூடியதாக இருந்தது. பெரும்பாலான பரீட்சார்த்திகளால் இலாப அல்லது நட்டக் கணக்கு மற்றம் ஏனைய முற்றடக்க வருமானக் கூற்று ஆகியவற்றுக்கான முழுப் புள்ளிகளையும் பெற முடியாமல் இருந்த போதிலும், அவர்களில் பெரும்பாலானவர்களால் நிதி நிலைமைக் கூற்றுக்காக ஒதுக்கப்பட்ட முழுப் புள்ளிகளையும் பெறக்கூடியதாக இருந்தது. ஒட்டுமொத்த மதிப்பீடு திருப்திகரமான மட்டத்தில் காணப்பட்டது.

வழக்கற்றுப்போன இருப்புகள் தொடர்பான செம்மையாக்கங்களைச் செய்து அவற்றைச் சரியாக சமர்ப்பித்த பரீட்சார்த்திகள் குறைந்தளவில் காணப்பட்டனர். பரீட்சார்த்திகள் கணக்கீட்டு நியமங்கள் தொடர்பில் கூடிய கவனத்தைச் செலுத்துதல் வேண்டும். சில பரீட்சார்த்திகள் வருமான வரி தொடர்பான செம்மையாக்கத்தைச் சரியாகச் செய்திருக்கவில்லை. செய்முறைகளைத் தெளிவாக வழங்கியதன் மூலம் வருமானக் கூற்றில் நிருவாகச் செலவுகள், விநியோகச் செலவுகள் மற்றும் நிதிக் கிரயம் ஆகியவற்றைச் சரியாகச் சமர்ப்பித்திருந்த பரீட்சார்த்திகளால் நியாயமானளவு புள்ளிகளைப் பெற முடிந்திருந்தது. வருமான வரி, வழக்கிழந்த இருப்புகள் மற்றும் தனிச்ச வட்டி போன்றவற்றுக்கான செம்மையாக்கங்களைச் சரியாகச் செய்யாததால் பல பரீட்சார்த்திகள் முழுப் புள்ளிகளையும் பெறத் தவறியிருந்தனர். நேர முகாமைத்துவத்தைக் கருத்திற்கொண்டு தகவல்களை வழங்க தேவைப்படுத்தப்பட்டுள்ளது. பெரும்பாலானவர்களால் தேய்மானத்தைச் சரியாகக் கணிப்பிட முடிந்திருந்தது. பரீட்சார்த்திகள் சரியான வடிவத்தில் நிதி நிலைமைக் கூற்றைச் சமர்ப்பிப்பது

பற்றியும் பொருத்தமான இடங்களில் உரிய பதிவுகளைக் காட்டுவது பற்றியும் கவனத்திற் கொள்ளவில்லை. செய்முறைகளைத் தெளிவாகக் காட்டுவதானது பரீட்சையில் அதிக புள்ளிகளைப் பெற உங்களுக்கு உதவும்.

- - -

**<u>பரீட்சார்த்திகளின் விளங்கிக்கொள்ளும் மட்டத்தை விருத்திசெய்வதில் கவனத்திற் கொள்ளப்பட வேண்டிய பொதுவான விடயங்கள்</u>:**

**(1)** பாடத்திட்டத்தின் முழுமையான உள்ளடக்கத்தை ஆழமாகக் கற்று, ஒவ்வொரு அலகு அல்லது பிரிவிலும் எதிர்பார்க்கப்படும் அறிவு மட்டத்தில் நல்லதொரு புரிந்துணர்வுடன் ஒவ்வொரு அலகு அல்லது பிரிவினதும் அறிவினை மேம்படுத்திக்கொள்ளவும்.

**(2)** வினாவைப் பல தடவைகள் வாசித்து, சகல கணிப்பீடுகளுக்குமான செய்முறைகளைத் தெளிவாகக் காட்டுக.

**(3)** ஏதாவது எடுகோள்கள் எடுக்கப்படின் அவற்றைத் தெளிவாகக் குறிப்பிடுக.

**(4)** தெளிவான கையெழுத்தில் எழுதுவதுடன் விடைகளின் இலக்கங்களையும் சரியாக எழுதவும். விடைத்தாளை ஒப்படைப்பதற்கு முன் வினா இலக்கங்களை மீளவும் பரிசீலிப்பது கட்டாயமானதாகும்.

**(5)** வினாப்பத்திரத்தில் தரப்பட்ட அறிவுறுத்தல்களைச் சரியாகப் பின்பற்றவும்.

**(6)** கடந்தகால வினாப்பத்திரங்கள் மற்றும் பரிந்துரைக்கப்பட்ட விடைகளில் பயிற்சி பெறுவதானது விளங்கிக்கொள்ளும் தன்மை, திறன்கள் மற்றும் அனுபவத்தை மேம்படுத்திக்கொள்வதற்கு உதவியாக அமையும். ஒரே அமைப்பைக் கொண்ட விடயங்கள் திரும்பவும் பரிசீலிக்கப்பட முடியும். எனவே இது சகல நேரங்களிலும் நன்மையானதாக அமையும்.

**(7)** இப்பாடத்துடன் சம்பந்தப்பட்ட கணக்கீட்டு நியமங்கள், பாடப்புத்தகம் மற்றும் சஞ்சிகைகள் ஆகியவற்றையும் அதேபோன்று பாடம் சம்பந்தமான வேறு விடயங்களையும் கற்றுக் கொள்ளவும்.

**(8)** நேர முகாமை மிக முக்கியமானதாகும். ஒவ்வொரு வினாவுக்கும் செலவழிக்கப்பட வேண்டிய நேரத்தை புள்ளிகள் ஒதுக்கப்பட்டுள்ள விதத்தைப் பார்த்து தீர்மானித்துக்கொள்ள முடியும்.

**(9)** நல்ல தயார்படுத்தலுடனும் பரீட்சையில் சித்தியடையும் இயலளவு உச்ச நம்பிக்கையுடனும் பரீட்சைக்கு முகங்கொடுக்கவும்.

- * * * -